தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண். 002238/அ1/2024 நாள்.௨.02.2024.

பொருள் .. வழக்கு –திருமதி பி.சந்திரகலா என்பார் தொடர்ந்த வழக்கு – வழக்கு எண் டபிள்யூ.பி.(எம்.டி) எண். 16208/2018 தீர்ப்பாணை நாள். 24.01.2022 ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பாணை – தீர்ப்பாணையின் மீது காலதாமதமாக மேல்முறையீடு செய்யப்பட்டது – நீதிமன்ற வழக்கின் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை. 1. உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். டபிள்யூ.பி.(எம்.டி) எண். 16208/2018 தீர்ப்பாணை நாள். 24.01.2022.

2. இவ்வியக்கக கடித ந.க.எண். ந.க.எண். 017343/ஜி1/2018 நாள். 09.03.2022, 30.11.2022, 20.04.2023 மற்றும் 04.07.2023.

3. C.M.P(MD) No.8513 of 2023 in WA (MD) SR.No.49882 of 2023 (Order of the Court was made by D.KRISHNAKUMAR.J) Dated: 23.01.2024.

-------------

தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் சரகம், வினைதீர்த்த நாடார்பட்டி,காமராஜ் நினைவு இந்து நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி கல்வித் தகுதியுடன் இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிடத்தில் பள்ளி நிர்வாகத்தால் 01.01.1997 முதல் நியமனம் செய்யப்பட்ட திருமதி பி.சந்திரகலா என்பார், அரசாணை நிலை எண். 155 பள்ளிக் கல்வித்துறை நாள். 03.10.2022ன்படி குழந்தை மனநலப் பயிற்சி பெற்றுள்ளதாகவும், பின்னர் தனியரின் நியமனம் 25.06.2005 முதல் ஏற்பளிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால், தனியர் தன்னைப் போன்ற ஆசிரியர்களுக்கு 2003 ல் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு அவர்களுக்கு 02.06.2003 முதல் நியமனம் ஏற்பளிக்கப்பட்டுள்ளதாகவும் , அதேபோன்று தனக்கும் 01.01.1997 முதல் 02.06.2003 முடிய காலங்களை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ள கோரியும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தனியரால் W.P(MD) No.16208/2018ன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் 24.01.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது.

" In the view of the matter, the Mandamus as sought for is issued and the respondents of the petitioner with effect from 02.06.2003, such that, her service for the period 01.10.1997 to 02.06.2003 be counted for pensionary benefits. Let this exercise be done within a period of six weeks from today."

இத்தீர்ப்பாணையின் மீது உரிய காலத்திற்குள் மேல்முறையீடு செய்ய பார்வை 2ல் காணும் இவ்வியக்கக செயல்முறைகள் வாயிலாக தென்காசி மாவட்டக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டும் சுமார் ஆறு மாதங்கள் கடந்த பின்னர் நீதிமன்ற வழக்கின் மீது தனிக்கவனம் செலுத்தாமலும், நீதிமன்ற வழக்கின் அவசரத்தை கருத்தில் கொள்ளாமலும் செயல்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) / வட்டாரக் கல்வி அலுவலரிடம் உரிய காலக்கெடுவிற்குள் மேல்முறையீடு செய்யாமல் 462 நாட்கள் காலதாமதமாக மேல்முறையீடு செய்த நபர்களிடமிருந்து உரிய விளக்கம் கோருமாறு பார்வை 3ல் காணும் நீதிமன்ற ஆணையின்படி விளக்கம் கோரப்பட்டுள்ளது என அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களின் (தொடக்க கல்வி) கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் (தொடக்கக் கல்வி) நீதிமன்ற வழக்கில் எதிர்வாதவுரை தாக்கல் செய்ய வேண்டிய இனங்களில் குறித்த காலத்தில் எதிர்வாதவுரை தாக்கல் செய்தும், அவ்வப்போது பெறப்படும் நீதிமன்றத் தீர்ப்பாணையின் மீது உரிய நேரத்தில் மேல்முறையீடு செய்தும், நீதிமன்ற வழக்கின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இதுபோன்ற நிகழ்வுகளில் மெத்தனமாக செயல்படும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) / தொடர்புடைய அலுவலர்கள்/பணியாளர்கள் மீது துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள உரிய அலுவலருக்கு பரிந்துரை செய்யப்படும் என திட்டவட்டமாக அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வி) அறிவுறுத்தப்படுகிறது.

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
(தொடக்கக் கல்வி) (மின்னஞ்சல் மூலமாக)
நகல். அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்.
(மின்னஞ்சல் மூலமாக)